**செய்தி வெளியீடு எண் : 047** **நாள்: 07.01.2022**

# செய்தி வெளியீடு

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் அதீத பரவல் மற்றும் ஒமைக்ரான் வைரஸ் நோயினை கருத்தில் கொண்டும், தமிழக அரசினால் தற்போது, மாநிலம் முழுவதும் 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளநிலையில், பொது போக்குவரத்து மற்றும் உணவிற்கான வசதி இல்லாத சூழலில் தேர்வு எழுதுபவர்களுக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டும், இது குறித்து தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களின் அடிப்படையிலும், 09.01.2022 **மு.ப மற்றும் பி.ப (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற இருந்த ஒருங்கிணைந்த புள்ளியியல் சார்நிலைப் பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான (அறிவிக்கை எண்.16/2021, நாள் 20.10.2021)** எழுத்துத் தேர்வு மட்டும் **11.01.2022** அன்று மு.ப மற்றும் பி.ப நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| அறிவிக்கை எண்/நாள் | தேர்வின் பெயர் | தேர்வு நடைபெறும் நாள் |
|---|---|---|
| 16/2021,<br>20.10.2021) | ஒருங்கிணைந்த புள்ளியியல்\| சார்நிலைப் பணிகளில் அடங்கிய பதவிகள் | 11.01.2022<br>மு.ப 10 மணி முதல் 1மணி வரை<br>(ம)<br>11.01.2022<br>பி.ப 3 மணி முதல் 5 மணி வரை |

2) தேர்வர்கள் **09.01.2022** மு.ப மற்றும் பி.ப நடைபெறுவதாக இருந்த ஒருங்கிணைந்த புள்ளியியல் சார்நிலைப் பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான தேர்வுக்காக ஏற்கனவே பதிவிறக்கம் செய்த நுழைவுச்சீட்டினையே உபயோகித்து, **11.01.2022** மு.ப மற்றும் பி.ப அன்று நடைபெறும் தேர்வினை, நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தேர்வு மையத்திலேயே தேர்வு எழுதஅனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3) மேலும், **08.01.2022** மு.ப மற்றும் பி.ப நடைபெறவிருந்த தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சார்நிலைப் பணிகளில் அடங்கிய கட்டிடகலை / திட்ட உதவியாளர் பதவிக்கான எழுத்துத் தேர்வு திட்டமிட்டபடி அதே நாளில் நடைபெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

திரு. கிரண் குராலா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**